மிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100 அண்ணாசாலை, கிண்டி, சென்னை– 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல்முகவரி: ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை: மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்: 43/மா/2023**

**நாள்:15.03.2023**

திரு. ஏ. மூர்த்தி,
தாம்பரம். – முறையீட்டு மனுதாரர்

ஆணையர், தாம்பரம் மாநகராட்சி,
தாம்பரம். – எதிர்மனுதாரர்

சென்னை, கிழக்கு தாம்பரம், சுப்பிரமணிய சிவா தெரு, கதவு எண்.1 என்ற முகவரியில் வசிக்கும் திரு. ஏ. மூர்த்தி என்பவரின் 06.02.2023 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 07.02.2023–ல் பெறப்பட்டு 43/மா/2023 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மேற்கண்ட மனுதாரரது மனு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தால் உரிய விசாரணை மேற்கொள்ளப்பட்டு அதன் அடிப்படையில் பரிசீலனை செய்யப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

சென்னை, கிழக்கு தாம்பரம், சுப்பிரமணிய சிவா தெரு, கதவு எண்.1 என்ற முகவரியில் வசிக்கும் திரு. ஏ. மூர்த்தி என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள 06.02.2023 நாளிட்ட தனது மனுவில்:

" மேற்கு தாம்பரம் முழு நேர கிளை நூலகம் 1957 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு சுமார் 64 ஆண்டு காலமாக செயல்பட்டு வருகிறது. 2018–2019 ஆம் ஆண்டில் பழைய கட்டிடத்தை இடித்து விட்டு புதிய கட்டிடமாக தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.50 லட்சமும் பொது நூலகத்துறை நிதியின் மூலம் ரூ.35 லட்சமும் ஆக மொத்தம் ரூ.85 லட்சத்தில் கீழ்தளம், முதல் தளம், இரண்டாம் தளம் என கட்டப்பட்டு 3 தளங்களுடன் செயல்பட்டு வருகிறது.

இந்நூலகம் காலை 08.00 மணி முதல் இரவு 08.00 மணி வரை செயல்பட்டு வருகிறது. நாளொன்றுக்கு சுமார் 600க்கு மேற்பட்ட வாசகர் பெருமக்கள் வந்து செல்கிறார்கள். சுமார் 400க்கு மேற்பட்ட நூல்கள் இரவலாக வழங்கப்பட்டு வருகிறது. நூலகத்தில் பல்வேறு நூல்களைக்கொண்டு தமிழ், ஆங்கிலம் என மொழிகளை கொண்ட நூல்கள் 72 ஆயிரத்துக்கு மேற்பட்ட நூல்கள் உள்ளன.

இப்படியான சூழ்நிலையில் அனைத்து பகுதி மக்கள் வந்து செல்லக்கூடிய தாம்பரத்தின் மையப்பகுதியான சண்முகம் சாலையில் அமைந்துள்ள நூலகத்தின் முன்புறத்தில் அதிகப்படியான பெண்கள் இருசக்கர வாகனத்தில் வந்து செல்வதால் அவர்களின் வாகனங்களை நிறுத்துவதற்காக ஒதுக்கப்பட்ட இடத்தில் தனிநபர் வியாபாரத் தளமாக மாற்றி அவ்விடத்தில் கடைகள் வைத்து ஆக்கிரமிப்பு செய்து வருகிறார்கள். இது சம்மந்தமாக ஆக்கிரமிப்பு கடைகள் அகற்ற பல்வேறு முறை நூலகர் மூலமாகவும், வாசகர் வட்டத்தின்

மூலமாகவும் கோரிக்கை மனு அளித்தும் எவ்வித நடவடிக்கைகள் இல்லாமல் ஆக்கிரமிப்பு கடைகள் அப்படியே இருந்து வருகிறது. அது மட்டும் இல்லாமல் குப்பைகளை நூலக நுழைவாயில் முன்புறமாக அருகிலுள்ள கடைக்காரர்களும் கொட்டி முன்புறத்தை அசுத்தப்படுத்தியும் துர்நாற்றம் வீசக்கூடிய கழிவுகளை கொட்டி நூலகத்திற்கு வரும் வாசகர்கள் முகம் சுளிப்புக்கு ஆளாக்கி வருகிறார்கள். மேற்கண்ட ஆக்கிரமிப்பு கடைகளை அகற்றியும் நூலக முன்புற நுழைவாயில் குப்பைகளை கொட்டாமலிருக்க தகுந்த நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

**2)** இம்மனு தொடர்பாக இம்முறைமன்ற நடுவ **22.02.2023** நாளிட்ட அறிவிப்பு மூலம் தாம்பரம் மாநகராட்சி ஆணையரின் அறிக்கை கோரப்பட்டது.

**3)** தாம்பரம் மாநகராட்சி ஆணையரிடமிருந்து மேற்கண்ட புகார்மனு தொடர்பாக எவ்வித அறிக்கையும் இம்முறைமன்ற நடுவத்தால் பெறப்படவில்லை.

**4)** இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை **06.03.2023** அன்று நேரடி விசாரணைக்கு ஆஜராகும்படி **22.02.2023** நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

**5)** மனுதாரர் **06.03.2023** அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்ட தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:

" மேற்கு தாம்பரம் முழு நேர கிளை நூலகம் **64** ஆண்டு காலமாக செயல்பட்டு வருகிறது. சுமார் **70** ஆயிரத்துக்கும் மேற்பட்ட பல்வேறு நூல்கள் கொண்ட மேற்கண்ட நூலகத்திற்கு நூற்றுக்கும் மேற்பட்ட வாசகர்களும், மாணவ மாணவியர்களும் வந்து செல்கின்றனர். மேற்கண்ட நூலகத்தின் நுழைவு வாயில் எதிரில் தனியர் சிலர் துணி வியாபாரம் போன்ற தற்காலிக கடைகளை வைத்து நூலகத்தின் முகப்பை மறைத்து விடுவது மட்டுமல்லாமல், அந்நூலகத்திற்கு வரும் வாசகர்கள் மற்றும் மாணவ மாணவியரின் வாகனங்கள் நிறுத்த இடமில்லாமல் மிகவும் சிரமப்படுகின்றனர். மாநகராட்சியில் புகார் அளித்தவுடன் எடுக்கப்படும் மேற்கண்ட கடைகள் அடுத்த நாளிலேயே மீண்டும் வைக்கப்படுகின்றன. எனவே, நிரந்தரத் தீர்வாக மேற்கண்ட நூலகத்தின் முன்புறம் வைக்கப்படும் கடைகளை நிரந்தரமாக அகற்றியும், மேற்கண்ட இடத்தை மீண்டும் வியாபாரிகள் ஆக்கிரமிப்பு செய்யாதவாறு எச்சரிக்கை பலகை வைத்திடவும் ஆவன செய்யுமாறு இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

**6)** தாம்பரம் மாநகராட்சி நகரமைப்பு அலுவலர் **06.03.2023** அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி தனது வாக்குமூலத்தை பின்வருமாறு சமர்ப்பித்துள்ளார் :

" மனுதாரர் குறிப்பிட்டுள்ள மேற்கு தாம்பரத்தில் அமைந்துள்ள நூலகத்தின் எதிரில் வணிகர்கள் தற்காலிகக்கடைகளை அமைத்துள்ளது குறித்து புகார் மனு பெற்றவுடன் மேற்கண்ட இடத்தில் இருந்த தற்காலிகக் கடைகள் அகற்றப்பட்டுவிட்டன என்கின்ற விபரத்தையும், அக்கடைகள் மீண்டும் வைக்கப்படுமேயானால், அக்கடைகளை காவல் துறை உதவியுடன் நிரந்தரமாக அகற்ற தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் எனவும், மேலும் அங்கு மீண்டும் கடைகள் ஏற்படாதவாறு எச்சரிக்கை பலகை வைத்திட மாநகராட்சியால் ஆவன செய்யப்படும் எனவும் இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

7) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, அவரது வாக்குமூலம் மற்றும் தாம்பரம் மாநகராட்சி நகரமைப்பு அலுவலரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன. பரிசீலனையில் பின்வரும் விவரங்கள் அறியமுடிகிறது.

மேற்கு தாம்பரத்தில் **64** ஆண்டு காலமாக கிளை நூலகம் செயல்பட்டு வருகிறது. நூற்றுக்கும் மேற்பட்ட வாசகர்களும் மாணவ மாணவியர்களும் வந்து செல்கின்றனர். நூலகத்தின் எதிரில் கடைகள் வைக்கப்பட்டு ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளதால் நூலகத்திற்கு வரும் வாசகர்கள் மற்றும் மாணவ, மாணவியர் தங்களது வாகனங்களை நிறுத்த இடமில்லாமல் சிரமப்படுகின்றனர். மாநகராட்சியில் புகார் அளித்தவுடன் அகற்றப்படும் கடைகள் அடுத்த

நாளிலேயே மீண்டும் வைக்கப்படுகின்றன. எனவே ஆக்கிரமிப்பு செய்துள்ள கடைகளை நிரந்தரமாக அகற்றியும் மீண்டும் வியாபாரிகள் ஆக்கிரமிப்பு செய்யாதவாறு எச்சரிக்கை பலகை வைத்திடவும் ஆவன செய்யுமாறு மனுதாரர் இம்முறைமன்றத்தை கோரியுள்ளார்.

மனுதாரர் குறிப்பிட்டுள்ள மேற்கு தாம்பரத்தில் அமைந்துள்ள நூலகத்தின் எதிரில் வணிகர்கள் தற்காலிககடைகளை அமைத்துள்ளது குறித்து புகார் மனு பெற்றவுடன் மேற்கண்ட இடத்தில் இருந்த தற்காலிகக் கடைகள் அகற்றப்பட்டுவிட்டன என்கின்ற விபரத்தையும், அக்கடைகள் மீண்டும் வைக்கப்படுமேயானால், அக்கடைகளை காவல் துறை உதவியுடன் நிரந்தரமாக அகற்ற தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் எனவும், மேலும் அங்கு மீண்டும் கடைகள் ஏற்படாதவாறு எச்சரிக்கை பலகை வைத்திட மாநகராட்சியால் ஆவன செய்யப்படும் என்பதையும் தாம்பரம் மாநகராட்சி நகரமைப்பு அலுவலரின் வாக்குமூலத்திலிருந்து அறிய முடிகிறது.

மனுதாரர் குறிப்பிட்டுள்ள மேற்கு தாம்பரத்தில் அமைந்துள்ள நூலகத்தின் எதிரில் வணிகர்களின் தற்காலிக கடைகள் அகற்றப்பட்டாலும் மீண்டும் அவர்கள் அங்கு தற்காலிக கடைகள் அமைப்பது தொடர்கிறது என்பதையும் அறியமுடிகிறது.

**2014** ஆம் ஆண்டைய தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவச்சட்டம் (ம) விதிகளில் இம்முறைமன்றத்திற்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையிலும், குறிப்பாக:–

பிரிவு " 7 " The Ombudsman shall perform all or any of the following functions, namely:-

7 (c ) where the irregularity is due to wilful negligence or dereliction of duty of any officer or employee of the local body, recommend for departmental action by the appropriate authority under the relevant rules அடிப்படையிலும், இந்நிகழ்வில் பின்வறுமாறு இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது:

தமிழ்நாடு அரசானது மனிதவள மேம்பாட்டிற்காக பல்வேறு முன்முயற்சிகள் எடுத்து வருகின்றது. அதில் நூலகமும் ஒன்று. மேற்கு தாம்பரம் முழு நேர கிளை நூலகம் தற்பொழுது **70** ஆயிரத்திற்கு மேற்பட்ட புத்தகங்கள் கொண்டு இயங்கி வருகின்றது. இந்நூலகத்தினை மாணவ மாணவியர்கள் மற்றும் அரசுத்தேர்வுக்கு தயாராகும் மாணவ மாணவியர்களும் பயன்படுத்தி வருகின்றனர். அவர்களின் வாகனங்ளை நிறுத்த இடமில்லாமல் மிகவும் சிரமப்படுவது என்பது வருத்தத்திற்குரியது. நூலகப்பயன்பாட்டையும், வாசிப்பு பழக்கத்தையும் அதிகரிப்பதற்கு 'நூலக நண்பர்கள்' திட்டமும் அரசின் முக்கியமான முன்னெடுப்பு. வாசிப்பு பழக்கத்தை அதிகரிப்பதற்கான தமிழ்நாடு அரசின் முயற்சிகளுக்கு நூலகங்களின் பராமரிப்பும், மேம்பாடும் மிகப்பெரிய அளவில் கைகொடுக்கும் என்பதில் ஐயமில்லை. கல்வி மற்றும் அறிவை வளர்க்கவும் உலகிலுள்ள பல்வேறு கலாச்சாரம் மற்றும் தகவல்களைத் தெரிந்துகொள்வதற்கும் புத்தகங்கள் உறுதுணையாக உள்ளன. புத்தகம் படிக்கும் பழக்கம் மாணவ, மாணவியரின் அறிவை விசாலமாக்குகிறது. மாணவர்களை அறிஞர்களாக ஆக்குவதில் வகுப்பறைக்கு இணையானது நூலகம். நூலகங்களின் பராமரிப்பு கேள்விக்குறியாக இருந்தால் அதனுடைய பயன்பாடு குறைந்து விடும். எனவே மேற்கண்ட கிளை நூலகத்திற்கு முன்புறம் உள்ள தற்காலிக கடைகளை நிரந்தரமாக அகற்றிட கீழ்க்கண்டவாறு நடவடிக்கை எடுக்க தாம்பரம் மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்ற நடுவம் பின்வருமாறு அறிவுறுத்தி ஆணையிடுகிறது.

1) தாம்பரம் காவல்துறையுடன் இணைந்து குழு ஒன்றினை அமைத்து மேற்கண்ட ஆக்கிரமிப்புகளை நிரந்தரமாக அகற்றிட நடவடிக்கை மேற்கொள்ளவும் மற்றும் மேற்படி நூலகத்தின் முன் வியாபாரிகள் கடை வைத்து ஆக்கிரமிப்பு செய்யாததை கண்காணிக்கவும் மற்றும் அதை உறுதி செய்யும் விதமாக 'surprise check' செய்யவும் அறிவுறுத்தப்படுகிறது.

2) மேற்கு தாம்பரத்தில் இயங்கி வரும் கிளை நூலகத்தின் முன் தற்காலிக கடைகளை வைத்து ஆக்கிரமிப்பு செய்யும் வியாபாரிகளுக்கு மாநகராட்சியின் விதிகளுக்குட்பட்டு சட்டப்பூர்வமான அபராதம் விதித்தல் மற்றும் கடைகளில் வைக்கப்படும் பொருட்களை கைப்பற்றுதல் (seizing of goods) போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளவும்,

3) மேற்படி நூலகத்தின் முன் வியாபாரிகள் ஆக்கிரமிப்பு செய்யாதவாறு எச்சரிக்கை பலகை வைத்திடவும் தாம்பரம் மாநகராட்சி ஆணையர் அறிவுறுத்தப்படுகிறார்.

4) காவல்துறையின் திடீர் தணிக்கைகள் மேற்கொள்ளவும், காவல் துறை அதிகாரிகளை கோரவும் ஆணையர் அறிவுறுத்தப்படுகிறார்.

2023-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 15-ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உ.ள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு. ஏ. மூர்த்தி
எண்.1, சுப்பிரமணிய சிவா தெரு,
கிழக்கு தாம்பரம்,
சென்னை – 600 059.

2) ஆணையர்,
தாம்பரம் மாநகராட்சி,
தாம்பரம்.

3) மாநகர காவல் ஆணையர்,
தாம்பரம் மாநகர காவல் ஆணையரகம்,
சோழிங்கநல்லூர்,
சென்னை.

4) நகராட்சிநிர்வாகஇயக்குநர்,
நகராட்சிநிர்வாகஇயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜாஅண்ணாமலைபுரம்,
சென்னை– 600 028.

5) இணைஇயக்குநர்
ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சிநிர்வாகஇயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜாஅண்ணாமலைபுரம்,
சென்னை– 600 028.

நகல்.
மாண்புமிகுமுறைமன்றநடுவரின் தனிச்செயலர்
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

16/3/23

செயலாளர்

16323